சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 166/2013

2025ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 09ம் நாள் PW2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.தி.கணேஷ், பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர். திரு.கண்ணன்<br>த/பெ. சீனுவாசன் | நாள் 09.02.2026 |
| வயது. | தொழில் |
| கிராமம். | வட்டம். |

**மனுதாரர் சா.2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு மனுதாரர்கள் தரப்பில் முதல் நிலை விசாரணை செய்யப்படுகிறார்**

நான் மனுவில் 3ம் தரப்பினர் மற்றும் மனுதாரர் தரப்பு சாட்சி. நான் எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் நான் சொல்லிதான் எழுதப்பட்டது. அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான்.

**2ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) விபத்து சம்பந்தமாக எனக்கு அழைப்பாணை ஏதும் வரவில்லை. மனுதாரர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இறந்தவர் எங்கள் ஊரை சார்ந்தவர் அல்ல. எனக்கு அவர்கள் உறவினர்களும் அல்ல. விபத்து சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. விபத்து சமயத்தில் நான் அங்கு தான் இருந்தேன் என்றால் சரிதான். விபத்து சம்பந்தமாக வேறு எந்த நீதிமன்றத்திலும் நான் சாட்சியமளிக்கவில்லை. விபத்து சமயத்தில்

நான் கள்ளபிரான்புரம் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்தேன். சுமார் இரவு 7 மணியளவில் நான் அங்கு நின்று கொண்டிருந்தபோது சென்னை மார்க்கமாக இரு சக்கர வாகனத்தில் நான்கு நபர்கள் சாலையின் ஓரமாக சென்று கொண்டிருந்தபோது திண்டிவனத்திலிருந்து சென்னை நோக்கி சென்ற தனியார் பேருந்து அவர்கள் மீது மோதி, அதில் 2 நபர்கள் இறந்து விட்டனர்.

2) அஜித் குமார் என்பவர் இறந்ததற்காக நான் சாட்சியமளிக்கிறேன். அஜித் குமார் இரு சக்கர வாகனத்தில் இரண்டாவதாக அமர்ந்து வந்தார். நான்கு நபர்கள் இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்ததால் அவர்கள் தான் நிலை தடுமாறி கீழே விழுந்து விபத்தை வரவழைத்துக் கொண்டனர் என்றாலும், இரண்டாம் எதிர்மனுதாரரைப் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென சொன்னாலும் சரியல்ல. மனுதாரர்களுக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியமளித்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.